முருகப்பெருமான் துணை

**மகான் அரிவாட்டய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.04.2024**, சனிக்கிழமை

1. வானவர்களே வியக்கும் வண்ணம்
வள்ளலாய் உலகினில் தரும
தானபலம் மிகுதி செய்தருளும்
தவசியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களென குரோதி தகர் திங்கள்
வல்லமைபட முன்னான்கீர்திகதி காரிவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 14 ம் நாள், 27.04.2024, சனிக்கிழமை)
3. வாரமதில் அரிவாட்டய நாயனார் யானும்
வையகம் வளம்பெற உரைப்பேன்
சோரமான தலைமை கண்டால்
செகமெங்கும் தயவு தருமம் மறந்து
4. மறந்து சுயநல வழிமுறையாக
மக்கள்கள் துன்புறும் வண்ணம்
பரந்த புவியில் வறுமை கொடுமை
பாவகருமச் செயல்கள் மிகுந்து
5. மிகுந்து நீதி கல்வி யாவுமே
மேலான விலைக்கு விற்கப்பட்டு
தகுந்த வழிகாட்டல் இல்லா
தரணியே அழிவுற நேரும்
6. நேருமை கொண்டச் சூழலை
நிலவுலகில் அமைக்கும் வண்ணமே
ஆறுமுக அரங்கமகா ஞானி
அவதாரம் எடுத்து அருளிவர
7. அருளிடும் ஞான வழிமுறைகளை
அனுகி உலகோர் ஏற்று
தருமத் தயவு மிக்க சன்மார்க்க
தவநெறி வழி உட்பட்டு வர

8. வருகவே நிலைகள் மாறும்
வதையானச் சூழல்கள் யாவும்
தருமத்தால் விலகி ஓடநேரும்
தான் என்ற கர்வம் கரைந்திட

9. கரைந்திட மக்கள் சேவையில்
கண்ணியமுற நடக்கும் தலைமை
மறைபோற்ற வாய்த்து நன்கு
மண்ணுலகம் காக்கப்படும் என்பேன்

10. என்கவே நல்லாட்சி ஞான ஆட்சி
இணையிலா ஞானிகள் ஆட்சியாக
நன்மைபட ஆளுமைகள் மாற
நாடெங்கிலும் இயற்கை ஆசி பலம் கூடி

11. கூடியே நீர்நில வளம் கூடி
குறைவிலா உற்பத்தி அபிவிருத்தி என
கூடியே உலகம் வளம்பல காணும்
கூறிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—